# வேலையாளாக இயேசு

*இழிவான வேலை என்று பிறர் நினைக்கும் வேலைகளை நீ செய்ததுண்டா? அத்தகைய இழிவான வேலைகளில் ஒன்றைத் தம் சீடர்களுக்காகச் செய்ய இயேசு தயங்கவில்லை. அதன்மூலம் சீடர்களுக்குத் தமது அன்பைக் காண்பித்தார்; மற்ற மக்களிடம் சீடர்கள் அன்புடன் பழகுவதை விரும்பினார்.*

'பஸ்காப்பண்டிகையை' ஆசரிப்பதற்காக இயேசுவும், சீடர்களும் ஓர் அறையில் ஒன்றாக இருந்தார்கள். இயேசு தம்முடைய சீடர்களைவிட்டுப் பிரியப்போகும் வேளை நெருங்கிக்கொண்டிருந்தது. சீடர்களுக்கு இன்னும் அதிகமான போதனைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்.

'இயேசுவே தங்கள் ராஜாவாக தங்களை ஆட்சிசெய்ய வேண்டும்' என சீடர்கள் எதிர்பார்த்தனர். அவ்வாறு இயேசு அமைக்கும் புதிய அரசில் தங்களுக்கு மிகச்சிறந்த பதவி கிடைக்கவேண்டும் என ஒவ்வொருவரும் தத்தம் மனதிலே ஆசைப்பட்டனர்.



இயேசுவும் சீடரும் இருந்த அறையிலே, பஸ்கா உணவு ஆயத்தமாக இருந்தது. பொதுவாக விருந்து சாப்பிடுவதற்கு முன்னர் விருந்தாளியின் கால்களை ஒரு வேலையாள் கழுவ வேண்டும். அந்தக் காலத்து வழக்கம் அது. அதிலும், பஸ்காப்பண்டிகை விருந்தின்போது கண்டிப்பாகக் கால்களைக் கழுவவேண்டும். அறையில் கால்களைக் கழுவத் தேவையான தண்ணீர் இருந்தது. கழுவிய பின்னர் கால்களைத் துடைப்பதற்குத் துண்டுகளும் அங்கே இருந்தன. ஆனால், வேலையாள் மட்டும் இல்லை.

சீடர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாமல் வேறு எதையோ பார்ப்பதுபோல உட்கார்ந்திருந்தார்கள். சீடர்கள்

## மனன வசனம்

**ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். யோவான் 13:14.**

அமைதியாக இருந்தனர். என்ன செய்யவேண்டும் என்று சீடர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், என்ன செய்ய வேண்டும் என்று தெரியாதவர்கள் போல இருந்தார்கள். ‘இயேசுவின் ஆட்சியிலே நான் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருக்கப்போகிறேன்;அப்படியிருக்க, நான் முழங்காலிட்டு, பாத்திரத்தில்தண்ணீர் வார்ப்பேனா? அந்தத் தண்ணீரால் அடுத்தவர் கால்களைக் கழுவி, துண்டால் துடைப்பேனா? ம்ஹூம்! நான் அப்படிச் செய்ய மாட்டேன். அடுத்தவர் கால்களைக்கழுவுவேனா? என்னால் அடுத்தவருடைய கால்களைக் கழுவமுடியாது’ என்று ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்கள்.

சீடர்களின் நினைவுகளை இயேசு அறிந்திருந்தார். ‘தேவனுடைய ராஜ்யம் அன்பானது’ என்பதைத் தம் சீடர்கள் அறிய விரும்பினார். மூன்றரை வருடங்களாக இயேசுவுடனேயே சீடர்கள் இருந்தனர். ஆயினும்,‘மற்றவர்களுக்குத் தாழ்மையாகச் சேவைசெய்வதுதான் தேவனுக்குப்பிரியமானது’என்பதைக் கற்றுக்கொள்ளவில்லை.

துண்டு ஒன்றை எடுத்துத் தமது இடுப்பில் கட்டினார் இயேசு. பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றினார். முழங்காலிட்டுக் குனிந்து, தம் சீடரின் கால்களைக் கழுவத்தொடங்கினார். சீடர்கள் திகைத்தனர்.

அனைத்தையும் படைத்த தேவகுமாரன், ஒரு வேலையாளாகத் தங்களது கால்களைக் கழுவுவதைக் கண்டு, மிகவும் வெட்கப்பட்டார்கள்.

பேதுருவால் தாங்க முடியவில்லை. “ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவக்கூடாது” என்று தடுத்தார்.

“நான் உன்னைக் கழுவாவிட்டால், என்னிடம் உனக்கு



# செய்தி

**பிறருக்கு நாம் சேவைசெய்யும்போது, தேவனுடைய அன்பைக் காட்டுகிறோம்.**

எந்தப் பங்கும் இல்லை'' என இயேசு கூறினார்.

அவ்வாறு இயேசு கழுவிக் கொண்டிருந்தபோதே சீடர்களின் உள்ளத்தில் இருந்த பெருமை, சுயநலம், போன்ற தீயகாரியங்கள் கழுவப்பட்டு வெளியேறிக் கொண்டிருந்தன. 'ஒருவருக்கு ஒருவர் சேவைசெய்ய வேண்டும்' என்பதை இயேசு தம் செயலின் மூலம் கற்பித்தார்.

பின்னர்,''ஆண்டவராகிய நானே, உங்கள் கால்களைக் கழுவியிருக்கிறேன்; நீங்களும் ஒருவர் கால்களை மற்றொருவர் கழுவவேண்டும். அப்படிச் செய்தால்தான், மேலான அன்பைப் பிறருக்குக் காட்ட முடியும்'' என்றார் இயேசு.

'உண்மையான உயர்வுக்கு அடையாளம் தாழ்மையே' எனும் உண்மையை இயேசு அவர்களுக்குக் கற்பித்தார். நாமும் அப்பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன்விரும்புகிறார். கண்ணே, இவ்விதம் செய்தால்தான் நாம் இயேசுவின் நண்பர்கள்.

## செய்முறை

*நாம் கிறிஸ்தவர்கள் என்பதைக் காட்டக்கூடிய முக்கிய அறிவுரை ஒன்று இங்கே கட்டத்திற்குள் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டத்திற்குள் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களையும் குறியீடுகளையும் பயன்படுத்தி, விடையைக் கண்டுபிடி.*



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம  | வ  | ற  | க  | கு  | ச்  | செ  |
| ர்  | ற்  | ரு  | க்  | சே  | வை  | ய்  |